# ரோஹிணி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ ரோஹிணி சக்தி**

பவ பந்தநிக்ரகம், வினோத கசளம்,

சிற்பரம், பரானந்தசொரூபம்

**3. திருப்பாவைபாசுரம் – 1 ரோஹிணி இயல்பு**

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்

நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்

சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வ சிறுமீர்காள்

கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்

நாராயணனே நமக்கே பறைதருவான்

பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/362dmUxxnVg**

**விளக்கம் :**

உலகத்தில் மதி நிறைந்த அவதாரம் – கண்ணன் அவதாரம். அவன் பிறந்த நக்ஷத்திரமே ரோஹிணியாகும். தரிசனம் காண போவோம், நீராட போவோம். இந்த கண்ணன் பாரம்பரியமானது, பிறப்பால் நன் தொழில் வளர்ப்பால் கூர்வேல் கொடுந் தொழிலுக்கு சேர்ந்துள்ளது. எனவே நல்லவனுக்கும், கெட்டவனுக்கும், கேட்டவனுக்கும் அருள் புரிபவனே ரோஹிணி கண்ணன் ஆவான்.

யசோதை இளஞ்சிங்கம், காட்டிற்கு ராஜா சிங்கம். இந்த உலகத்தை ஆள்பவன் இளஞ்சிங்கம் ஆவான். உடல், மனம், ஆன்மா இவை மூன்றும் முறையே கார்மேனி, கதிர்மயம், செங்கண் என சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த ரோஹிணி கண்ணன் அவதாரத்தில் செம்மையான கண்ணையுடைய ஆன்மா என்பதினால் தானோ ரோஹிணி கண்ணன் ஆனானோ! புருவ மத்தியில் உள்ள பரஞ்சோதி இங்கே செங்கண் என சித்தரிக்கப்பட்டுள்ளது.

உடல் என்பது மேனி. இந்த மேனி சரிவர பயன்பட வேண்டும் என்பதை கார்மேனி எனக் காட்டப்பட்டுள்ளது. கார் என்றால் மழை, மழை மண்ணிற்கு மிகவும் முக்கியம். கண்ணன் மேனி கார்மேனி. எனவே கண்ணன் உடல் மழை மேகம் போல் மண்ணிற்கு பயன்படுகிறது.

மனம் என்பது அனைவரும் அறிந்த, மனம் ஒரு குரங்கு. ஆனால் கண்ணன் மனமோ கதிர்மதியம் போல் சமநிலை கொண்டது. கதிர் என்றால் கதிரவன், சூரியன்; மதி என்றால் சந்திரன், சூரிய சந்திரனுக்கு ஒப்பான மனநிலை கண்ணனை தவிர வேறு எவர்க்கும் இல்லை. எனவே இந்த ரோஹிணி கண்ணன் நாராயணனே நமக்கே அருள் புரிவான். எனவே படிந்து அருளை முழுமையாய்ப் பெறுவோம்.

ரோஹிணி மதி நிறைந்தவன் நீ, இளஞ்சிங்கம் நீ, கார்மேனியும் நீ, கதிர்மதியமேனியும் நீ, இதனிடையே செங்கண் முகத்தான் நாராயணன் நீ, ஆனந்த சொரூபம் நீ, உலகம் புகழும் உத்தமன் நீ, உன்னைப் படிந்தால் பவவந்த, நிக்ரகம், கனிந்து வரும். அதாவது பந்த அனுபந்தங்களில் தொடர்ந்து வரும் பாவங்கள் உன்னால் மட்டுமே விமோசனம் காணப்பெறும்.

நல்லவனாயினும், கெட்டவனாயினும் பறை தந்து உதவி செய்து எல்லோரும் பாராட்டும் படி நடந்து கொள்வார்.

கூர்வேல் கொடுந்தொழிலும், ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்களும் உனக்கு சொந்தமாகும். இந்த வினோத நட்பு செயல்பட உன்னால் மட்டுமே முடியும். ஏரார்ந்த கன்னி என்னும் அழகிய கண்களை உடைய கண், உன்னுடைய சிற்பரம். சிறு, சிறு விளையாட்டுகள் எப்பொழுதும் எல்லோருக்கும் குளிரூட்டும்.

உலகத்தில், நகரத்தில், ஊரில் உள்ள அனைவரும் எந்த வகையிலாவது ரோஹிணியின் சொற்படி படிந்து நடந்து செல்வதே சிலாக்கியமாகும். ரோஹிணியே வருக! ரோஹிணியே அருள்க!

## 4. வேதத்தில் ரோஹினி ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ப்ரஜாவிருத்யைச் வித்மஹே
விஸ்வரூபாயை தீமஹி
சித்ரபானு தீமஹி
தன்னோ ரோஹினி ப்ரசோதயாத்;

வினைகளை தீர்க்கும் அருமருந்தே
விரும்பும் வரங்களை தந்திடுமே
விடியல் தருமே விண்ணொளியே
வினோத சகியே நமோ நமோ;

ஆனந்த சொரூபம் எனைக்கொண்ட
ஆநிரைக் கண்ணன் தாரகையே
பணிந்தோர் தமக்கு கைகொடுக்கும்
பலன் தரும் ரோஹினி நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. ரோஹிணி கவிதை

எதிரியாகினும் நண்பனாகினும் உதவுவாய் நீ
ஆசைகளையும், தேவைகளையும் அருள்வாய் நீ
விளைவுகளையும், வினைகளையும் தீர்ப்பாய் நீ
விநோதங்களின் விளையாட்டுகள் நீயே அன்றோ!

நினைத்தாலே இனிக்கும் இகபரசுகங்கள் நீ
ஏக்கமும், தாக்கமும் தந்திடும் ஊக்கமே நீ
பர ஆனந்தத்திலும் சிறு, சிறு வீடுகள் உன்னிடமே
நோக்கமே நினக்கில்லை ; ஆனாலும் ஏக்கம் எமக்கே!

தூக்கமே நினக்கில்லை ; ஆனாலும் தாக்கம் எமக்கே!
முடிவுகள் தெரிந்தும் அதை கேள்வியாக்கிய நீயே
மடிந்து, படிந்து, விடிந்தாலும் விடை சொல்லமாட்டாயே
அதீதமான கற்பனைகளில் மதுரமாக மகிழ்விப்பவளே
அவசரமான கோலங்களில் நல்லதை வசம் காண்பாயே
அலைகள் ஓய்வதில்லை; நின் அலைகளும் ஓய்விப்பதில்லை
இரகசிய சிநேகிதனே! எதிலும் ரகசியம் ஏன்? ஏன்?

தூது வரின் துக்கம் மறையும்; விஸ்வரூபம் புரியும்
தாது வரின் தூக்கம் பதுங்கும்; விஸ்வ நேசம் விளங்கும்
தோது வரின் தாக்கம் விளங்கும்; விஸ்வ ஜீவன் பறக்கும்
மாது வரின் ஆக்கம் அங்கம்; விஸ்வப்பாவை பாடும்

ப்ரம்மார்பணம் விண்மீன்கள் படைக்கும் படையலுக்கே!
கிருஷ்ணார்பணம் தெரிந்தே செய்யும் வினைகட்கே!
சிவார்ப்பணம் வாழ்க்கை விடுக்கும் விடைகட்கே!
ரோஹிணி அர்ப்பணம் குழலோசை பரப்பும் வளத்திற்கே!

## 6. அபிராமி அந்தாதியில் ரோஹினி சக்தி

**வைராக்கிய நிலை எய்த**

பூத்தவளே புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னைஅன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

**தலைமை பெற**

வந்திப்பவர் உன்னை வானவர்; தானவர்; ஆனவர்கள்;
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே;
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.

**பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற**

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

**முக்காலமும் உணரும் திறன் உண்டாக**

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ரோஹினி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் ருத்ராய நம | – பிரளயகால ஓலமே போற்றி |
| ஓம் பஹூஸிரஸே நம | – எண்ணிலா சிரசே போற்றி |
| ஓம் பப்ரவே நம | – உலக நிர்வாகமே போற்றி |
| ஓம் விஸ்வயோநயே நம | – உலக காரணியே போற்றி |
| ஓம் ஸூசிஸ்ரவஸே நம | – புனிதப்படுத்தும் பாலகனே போற்றி |
| ஓம் அம்ருதாய நம | – சாகாக்கலையே போற்றி |
| ஓம் ஸாஸ்வதஸ்தாணவே நம | – நிலையான ஸ்தானமே போற்றி |
| ஓம் வராரோஹாய நம | – வரமருளும் நாபியே போற்றி |
| ஓம் மஹாதபஸே நம | – மஹா பிரம்ம உற்பத்தியே போற்றி |
| ஓம் ஸர்வகாய நம | – இயற்கை இயல்பே போற்றி |
| ஓம் ஸர்வவித்பாநவே நம | – இயல்பான ஒளிர்வே போற்றி |
| ஓம் விஸ்வக்ஸேநாய நம | – அசுர நடுக்க காரணியே போற்றி |
| ஓம் ஜநார்தநாய நம | – பாவப்பட்ட ஜனங்களின் விமோசனமே |
| ஓம் வேதாய நம | – வேதத்தின் மாண்பே போற்றி |
| ஓம் வேதவிதே நம | – வேத வித்தையே போற்றி |
| ஓம் அவ்யஙங்காய நம | – குறையிலா நிறைகுடமே போற்றி |
| ஓம் வேதாங்காய நம | – வேத அங்கமே போற்றி |
| ஓம் வேதவிதே நம | – வேத வித்தகனே போற்றி |
| ஓம் கவயே நம | – பார்வை போர்வையே போற்றி |
| ஓம் லோகாத்யக்ஷய நம | – பேரண்ட சாக்க்ஷியே போற்றி |
| ஓம் ஸூராத்யக்ஷய நம | – காவல் தெய்வங்களின் அதிபதியே போற்றி |
| ஓம் தர்மா த்யக்ஷய நம | – தர்ம, அதர்ம கடாக்ஷமே போற்றி |
| ஓம் க்ருதாக்ருதாய நம | – காரண, காரிய நிஷ்களங்கமே போற்றி |
| ஓம் சதுராத்மநே நம | – நால்வகை தோற்றமே போற்றி |
| ஓம் சதுர்வ்யூஹாய நம | – நான்முக பயணமே போற்றி |
| ஓம் சதுர்த்ரம்ஷ்ட்ராய நம | – நாற்பணி நரசிம்மமே போற்றி |

ஓம் சதுர்புஜாய நம – சதுர்புஜமே போற்றி

ஓம் ப்ராஜிஷ்ணவே நம – பரிசுத்த பேரொளியே போற்றி

ஓம் போஜநாய நம – போஜனமே போற்றி

ஓம் போக்த்ரே நம – போகமே போற்றி

ஓம் ஸஹிஷ்ணவே நம – சகிஷ்ணு போற்றி

ஓம் ஜகதாதிஜாய நம – ஜெகத்தை பிறப்பித்தவனே போற்றி

ஓம் அநகாய நம – பாவமில்லா தலைவா போற்றி

ஓம் விஜயாய நம – அனைத்திலும் விஜயனே போற்றி

ஓம் ஜேத்ரே நம – இயற்கையில் பெரிய ஆண்டவரே போற்றி

ஓம் விஸ்வயோநயே நம – பேரண்ட மூலமே போற்றி

ஓம் புநர்வஸவே நம – ஜீவன் முக்தியே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ரோஹிணி சக்தி

நக – தீததி – ஸஞ்சன்ன – நமஜ்ஜன – தமோகுணா
பதத்வய – ப்ரபாஜால – பராக்ருத – ஸரோருஹா

சிஞ்ஜான – மணிமஞ்ஜீர – மண்டித – ஸ்ரீ – பதாம்புஜா
மராளீ – மந்தகமனா – மஹாலாவண்ய – சேவதி

ஸர்வாருணா – நவத்யாங்கீ – ஸர்வாபரணபூஷிதா
சிவ – காமேச்வராங்கஸ்தா – சிவா – ஸ்வாதீனவல்லபா

ஸு⁶மேரு – மத்யச்ருங்கஸ்தா – ஸ்ரீமந்நகர – நாயிகா
சிந்தாமணி – க்ருஹாந்தஸ்தா – பஞ்ச – ப்ரஹமாஸனஸ்த்திகா

மஹாபத்மாடவீ – ஸம்ஸ்தா – கதம்பவன – வாஸிநீ
ஸு⁶தாஸாகர – மத்யஸ்தா – காமாட்சி – காமதாயினீ

தேவர்ஷி – கண ஸங்காத – ஸ்தூயமாநாத்ம – வைபவா
பண்டாஸு⁶ர – வதோத்யுக்த – சக்திஸேநா – ஸமன்விதா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் ரோஹினி சக்தி

திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா

ஜகத்குரோ சிவகுமரா சித்தமலம் அகற்றிடுவாய்

செங்கோட்டு வேலவனே சிவானுபூதி தாரும்

சிக்கல் சிங்காரா ஜீவனைச் சிவனாக்கிடுவாய்

குன்றக்குடிக் குமரா குருகுஹனாய் வந்திடப்பா

குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்

பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா

பவழமலை ஆண்டவனே பாவங்களை போக்கிடப்பா

விராலிமலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா

வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே

வெண்ணெய்மலை முருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்

கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்

காந்த மலைக் குமரா கருத்துள் வந்திடுவீர்

மயிலத்து முருகா நீ மனத்தகத்துள் வந்திடுவீர்

கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்

குமரமலை குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்

வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்

வடபழனி ஆண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்

ஏழுமலை ஆண்டவனே எத்திக்கும் காத்திவீர்

ஏழ்மை அகற்றி ஸ்கந்தா எமபயம் போக்கிடுவீர்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி ரோஹிணி சக்தி

கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது

இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்

சுடுவாய் நெடு வேதனை தூள்படவே

விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.(7)

அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்

பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா

குமரன் கிரிராச குமாரி மகன்

சமரம் பெரு தானவ நாசகனே.(8)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் ரோஹிணி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| தேனுகா | நாடகப்பிரியா | நாடகப்பிரியா | கோகில பிரியா |

## 12. மூலமந்திரம்

கிலிங் – கிருஷ்ண – கிலிங்

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நாவல் | சிவப்புமந்தாரை | மந்தாரை | நாகலிங்கம் |

## 14. பரிகாரம்

- ஆடம்பர பொருட்கள் பருவப் பெண்களுக்கு தானம் செய்யவும்.
- நட்சத்திர நாளன்று வாழ்க்கை துணையுடன் செலவு செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு பாண்டவதூதப்பெருமாள் திருக்கோயில்**, காஞ்சிபுரம்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra